**Series P/PB2/1**

**SET 1**

**CLASS X PRE-BOARD EXAMINATION – 2024-25**

**Q.P. Code: 006/2/1**

**Roll No.** | | | | | | | | |

**Candidate must write the Q.P. Code on the title page of the answer-book.**

- Please check that this question paper contains **10** printed pages.
- Please check that this question paper contains **14** questions.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- **Please write down the serial number of the question in the answer-book before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# தமிழ்
# TAMIL

**காலஅளவு:3மணி** **மொத்தமதிப்பெண்கள்:80**

*Time allowed : 3 hours* *Maximum Marks : 80*

***General Instructions:***

*Read the following instructions very carefully and strictly follow them :*

1. *This question contains **FIVE** sections.*
2. *It has total **14** questions.*
3. *Section **A** – Contains **2** questions. [ Question No. **1 to 2**]*
4. *Section **B** – contains **4** questions. [Question No. **3 to 6**]*
5. *Section **C** – contains 4 questions. [Question No. **7 to 10**]*
6. *Section **D** – contains **1** questions. [Question No. **11**]*
7. *Section **E** – contains **3** questions. [Question No. **12 to 14**]*
8. *Attempt as per specific instructions for each question.*
9. *Please write down the Serial No. of the question in the answer book before attempting it.*

## SECTION-A (READING) 10 MARKS

## பகுதி – அ (படித்தல் திறன்) 10 மதிப்பெண்கள்

**1.பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்றவிடையை எழுதுக. (5x1=5)**

மாறன் அலங்காரம் தமிழ் இலக்கண நூல்களுள் ஒன்று. இது பாட்டில் அமையும் அணிகள் பற்றி விரிவாகப் பேசும் நூல். இது ஆழ்வார் திருநகரியில் வாழ்ந்த திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவரால் இது எழுதப்பட்ட மாறன் அகப்பொருள். மாறன் பாப்பாவினம், மாறன் அலங்காரம் என்னும் மூன்று நூல்களில் ஒன்று.தமிழ் இலக்கணம் பற்றிப் பேசும் அதே வேளையில் இந்நூலில் மாறனாகிய நம்மாழ்வார் பெருமையும் சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளது. வைணவ ஆழ்வார்களில் ஒருவராகிய நம்மாழ்வாரைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது இந்நூல். பாண்டி நாட்டுச் சிற்றரசர் வழிவந்தவர் நம்மாழ்வார். பேரரசர்களுடைய பெயரைச் சிற்றரசர்களும் சூட்டிக்கொள்ளும் அக்கால வழக்கத்துக்கு அமைய நம்மாழ்வாரும் பாண்டிய மன்னர்களைக் குறிக்கும் மாறன் என்ற பெயராலும் அறியப்பட்டவர். இதனால் இப் பெயரைத் தழுவி இந்நூலுக்கு மாறனலங்காரம் எனப் பெயரிடப்பட்டது. அணியிலக்கணத்தைத் தனிநூலாகச் செய்த முதல் நூல் தண்டியலங்காரம். காஞ்சிபுரத்தில் வாழ்ந்த தண்டி என்பவர் வடமொழியில் இயற்றிய அலங்கார நூலைப் பின்பற்றித் தமிழ்நூல் தண்டியலங்காரம் 12-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. அதன் விரிவாக மாறன் அலங்காரம் எழுதப்பட்டது.

**வினாக்கள்:**

1. மாறன் அலங்காரம் நூல் எதைப் பற்றி விரிவாகப் பேசுகிறது?

அ) தமிழ் இலக்கணம் ஆ) பாட்டில் அமையும் அணிகள்

இ) வைணவ ஆழ்வார்கள் ஈ) பாண்டிய நாட்டு வரலாறு

2. மாறன் அலங்காரத்தை இயற்றியவர் யார்?

அ) தண்டி ஆ) திருக்குருகைப் பெருமாள் கவிராயர்

இ) நம்மாழ்வார் ஈ) பாண்டிய மன்னன்

3. மாறன் அலங்காரம் எந்த ஆழ்வாரைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது

அ) ஆண்டாள் ஆ) திருமங்கை ஆழ்வார்

இ) நம்மாழ்வார் ஈ) குலசேகரா ஆழ்வார்

4. மாறன் அலங்காரம் என்னும் பெயர் எதனால் ஏற்பட்டது

அ) நூலின் ஆசிரியரின் பெயரால்

ஆ) நூலின் உள்ளடக்கத்தால்

இ) நம்மாழ்வாரைத் தலைவனாகக் கொண்டதால்

ஈ) நூல் எழுதப்பட்ட காலத்தால்

5. மாறன் அலங்காரத்திற்கு முன் எழுதப்பட்ட அலங்கார நூல் எது?

அ) தண்டியலங்காரம் ஆ) தொல்காப்பியம்

இ) திருக்குறள் ஈ) நன்னூல்

**2.பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்டுள்ளவினாக்களுக்குவிடை எழுதுக.** 5x1=5

யானைகள் தங்கள் தும்பிக்கையைக் கொண்டு மோப்பம் பிடிக்கவும், சுவாசிக்கவும், பிளிறிச் சத்தமிடவும் பயன்படுத்துகின்றன. எதிரிகளால் ஆபத்து வரும்போது யானை தனது தும்பிக்கையை உயர்த்தி தனது தலைக்கு மேல் வைத்துக் கொண்டு பிளிறும். அப்போது அது வெளிப்படுத்தும் சத்தம் எதிரியை நிலைகுலையச் செய்யும். மேலும் உயர்த்திய தும்பிக்கையைப் பயன்படுத்தி எதிரியைத் தாக்கவும் செய்யும். யானைகள் தங்கள் தும்பிக்கை மூலம் தங்களது கூட்டத்தைச் சேர்ந்த மற்ற யானைகளுக்குத் தகவல் பரிமாற்றம் செய்கின்றன. சண்டையிடும்போது பலம்வாய்ந்த யானை தனது தும்பிக்கையால் இன்னொரு யானையை இழுத்துத் தள்ளிவிடும். இதன் மூலம் தனது பலத்தை நிரூபிக்கின்றன. கடினமான பொருளை பிடித்து இழுத்துச் செல்லவும் தும்பிக்கையில் தண்ணீர் நிரப்பி அதைப் பன்னீர் தெளிப்பது போல தெளிக்கவும் யானைகள் பயன்படுத்துகின்றன.

வினாக்கள்

1.யானைகள் எப்படி மோப்பம் பிடிக்கின்றன?

2. யானைகள் ஆபத்து நேரும்போது என்ன செய்யும்?

3. யானைகள் எவ்வாறு பிற யானைகளுக்குத் தகவல் பரிமாற்றம் செய்கின்றன?

4. யானைகள் தும்பிக்கையில் தண்ணீரை நிரப்பி எவ்வாறு தெளிக்கின்றன?

5. யானைகள் தங்கள் பலத்தை எவ்வாறு காட்டுகின்றன?

## SECTION –B (Grammar) 12 Marks

## பகுதி – ஆ (இலக்கணப்பகுதி) 12மதிப்பெண்கள்

**3.சான்று தருக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)** **(3x1=3)**

(i) இன்னிசையளபெடை

(A) மாஅல் (B) உண்பதூஉம்

(C) கெழீஇ (D) தொழாஅள்

ii) ஆறாம் வேற்றுமைத் தொகை

(A) இராமன் மகன் (B) என் சட்டை

(C) கைதொழுதான் (D) தண்ணீர் தொட்டி

(iii) வினைமுற்றுத் தொடர்

(A) வந்தார் கவிஞர் (B) பறித்த பூங்கொடி

(C) எழுந்தது அலை (D) வாழ்க தமிழ்

(iv) நேர்விடை

(A) படித்தேன் (B) படித்திலேன்

(C) அங்கு படிப்பேன் (D) நீயே படி

(v) முல்லைநில மலர்

(A) செங்கழுநீர் (B) தாழை

(C) தோன்றி (D) பாதிரி

**4.கோடிட்ட இடங்களை நிரப்புக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3x1=3)**

(i) `மை` என்பது................................ .

(A) பண்பு விகுதி (B) வேற்றுமைஉருபு

(C) பண்பு உருபு (D) வினைப் பகுதி

ii) முற்று பெறாத வினை பெயர்ச்சொல்லைத் தொடர்வது....................................ஆகும்.

(A) பெயரெச்சத் தொடர் (B) வினைமுற்றுத்தொடர்

(C) வினையெச்சத் தொடர் (D) முற்றெச்சத் தொடர்

(iii) இரு திணையும் ஐம்பாலும் மூவிடமும் காலமும் வினாவும் விடையும் பலவகை மரபுகளும் ஆகிய ஏழும் தொடர்களில் இலக்கணப் பிழைகளுடன் வந்தால் அவை................................. எனப்படும்

(A) வழு (B) வழா

(C) வழுவமைதி (D) மரபு வழு

(iv) விடை......................... வகைப்படும்.

(A) ஆறு (B) எட்டு

(C) ஒன்பது (D) பத்து

(v) முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியன ................................ உரியன.

(A) புறத்திணைக்கு (B) பாடாண்திணைக்கு

(C) ஐந்திணைக்கும் (D) பெருந்திணைக்கு

**5.இலக்கணக் குறிப்பு எழுதுக.(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3x1=3)**

(i) சுடு

(A) முதனிலைத் தொழிற்பெயர் (B) வினையாலணையும் பெயர்

(C) தொழிற்பெயர் (D) வியங்கோள்வினைமுற்று

ii) நண்பா எழுது!

(A) எழுவாய்த் தொடர் (B) உரிச்சொல் தொடர்

(C) வினையெச்சத் தொடர் (D) விளித் தொடர்

(iii) குலசேகர ஆழ்வார் `வித்துவக் கோட்டம்மா` என்று ஆண் தெய்வத்தை அழைத்து பாடுவது

(A) இடவழுவமைதி (B) மரபுவழுவமைதி

(C) திணைவழுவமைதி (D) பால்வழுவமைதி

(iv) ஆசிரியரிடம் `இந்த கவிதையின் பொருள் யாது?` என்று மாணவர் கேட்டல்

(A) அறிவினா (B) அறியாவினா

(C) ஐயவினா (D) கொளல்வினா

(v) சித்திரை, வைகாசி

(A) பின்பனிக் காலம் (B) குளிர்காலம்

(C) இளவேனிற் காலம் (D) முன்பனிக்காலம்

**6.கூறியவாறு செய்க.(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3x1=3)**

(i) உண்பதூஉம் (அளபெடையை நீக்கு)

(A) உண்பதூம் (B) உண்பதும்

(C) உண்பதுஉம் (D) உண்பஅதும்

ii) தமிழ் ( பண்புத் தொகையாக்குக)

(A) முத்தமிழ் (B) தமிழ் அறிஞர்

(C) தமிழ் மொழி (D) செம்மொழி

(iii) கரும்பு இனிக்கும் (ஏற்ற அடுக்குத் தொடர் சேர்)

(A) பழக பழகப் (B) பருக பருகப்

(C) குடிக்க குடிக்கப் (D) சுவைக்க சுவைக்கப்

(iv) சீதா அழுதான் .(வழுவை வழாநிலையாக மாற்றுக.)

(A) சீதா அழுதாள் (B) சீதா அழுகிறது

(C) சீதா அழுத்து (D) சீதா அழுவான்

(v) காலை 6 மணி முதல் 10 மணி வரை (எற்பாடு ஆக்கு)

(A) பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை

(B) மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை

(C) இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை

(D) இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை.

## பகுதி – இ-(இலக்கியம்)

**7.பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக. (2X1=2)**

(i) முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை

இன்மை ...................... விடும்.

(A) தொடர்பினை (B) தொடர்கை

(C) புகுத்தி (D) தொடர்பு

ii) செய்க பொருளைச் ......................... செருக்கறுக்கும்

எஃகதனிற் கூரிய தில்.

(A) செய்யார் (B) செல்வர்

(C) செகத்தர் (D) செறுநர்

' **8.பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்து ,தொடர்ந்துள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்றவிடைஎழுதுக. (5X1=5)**

" வெய்யோன் ஒளி தன் மேனியில் விரி சோதியில் மறைய
பொய்யோ எனும் இடையாளோடும் இளையானொடும் போனான்;
மையோ? மரகதமோ? மறிகடலோ? மழைமுகிலோ?
ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்"

(i) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

(A) மலைபடுகடாம் (B) திருவிளையாடற் புராணம்

(C) கம்பராமாயணம் (D) காசிக்காண்டம்

ii) இப்பாடலை இயற்றியவர் யார்?

(A) கம்பர் (B) அதிவீரராம பாண்டியர்

(C) பரஞ்சோதி முனிவர் (D) பெருங்கௌசிகனார்

(iii) இப்பாடல் இடம் பெற்ற படலம் யாது?

(A) கங்கை காண் படலம் (B) நாட்டுப் படலம்

(C) வதைப்படலம் (D) கங்கைப்படலம்

(iv) முகில் – பொருள்தருக.

(A) பகைவர் (B) மேகம்

(C) தம்மக்கள் (D) நண்பர்

(v) இளையான் – யார்?

(A) இராமன் (B) இலக்குவன்

(C) சீதை (D) பெருமாள்

**9.பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**(3x3=9)**

(i) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

(ii) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

(iii) மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.

(iv) வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

(v) வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதை குறள்வழி விளக்குக.

**10. பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**(3x5=15)**

(i) குலை, கொழுந்து வகைகளுக்கான பெயர்களை எழுதுக.

(ii) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

(iii) இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

(iv) மொழிபெயர்ப்புச் செம்மை குறித்து விளக்கி எழுதுக.

(v) தோற்பாவைக் கூத்து என்னும் நிகழ்கலையின் தற்கால வடிவம் குறித்து விவரித்து எழுதுக.

## பகுதி – ஈ(துணைப்பாடம்)

**11..பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக.**

**(1x10=10)**

(i) உரைநடையின் அணிநலன்கள்

(ii) கோபல்லபுரத்து மக்கள்

(iii) பாய்ச்சல்

## பகுதி – உ(படைப்பாற்றல்)

**12. கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. (3)**



**13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று வரைக.**

**(1x8=8)**

(i)`மனிதநேயம்' என்ற தலைப்பில் நீ எழுதிய புதுக்கவிதையினை அமுதம் இதழில் வெளியிட வேண்டி அங்குள்ள தலைமை அலுவலருக்குக் கடிதம் எழுதுக

(அல்லது)

(ii)உனது பள்ளியில் நடைபெற்ற மரம்நடுவிழா குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

(உமது முகவரி: கா.தமிழ்மாறன்/கா.யாழினி,27,காவேரி நகர்,மாமல்லபுரம், செங்கல்பட்டு)

**14.பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக.** **(1X6=6)**

(i) முன்னுரை-தமிழர் போற்றும் அறம்-அரசியல் அறம் -போர்அறம்-கொடை-வாய்மை-முடிவுரை

(அல்லது)

(ii) முன்னுரை-நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – நம் கடமை-முடிவுரை

(அல்லது)

(iii) முன்னுரை - உணவு- உணவே மருந்து -துரிதஉணவின் தீமை-இயற்கை உணவின் அவசியம் – விழாக்களும் உணவும் – மரபு போற்றுவோம்-முடிவுரை

*********